(2) தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1974).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மேலவைத் தலைவரவர்களே,

"தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1974) ஆய்வு செய்யும் பொருட்டு, இரு அவைகளையும் சேர்ந்த 30 உறுப்பினர்களைக் கொண்ட (சட்டப் பேரவை உறுப்பினர்கள் 20, சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் 10) கூட்டு ஆய்வுக் குழு ஒன்றை அமைப்பதில் சட்டப் பேரவைக்கு இம் மன்றம் தனது இசைவைத் தெரிவிக்கின்றது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு, மேலவையின் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் :—

1. திரு. எஸ். டி. ஆதித்தன்
2. திரு. எம். ஆறுமுகசாமி
3. திரு. எம். எம். பக்கர்
4. திரு. எல். பலராமன்
5. திரு. எ. ஆர். தாமோதரன்
6. திரு. எம். கே. டி. நடராசன்
7. திரு. கே. ராஜாராம்
8. திரு. ரஸ்ஸல் ராஜ்
9. திரு. இரா. சாம்பசிவம்
10. திரு. வி. வெங்கா"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை—

"தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1974) ஆய்வு செய்யும் பொருட்டு, இரு அவைகளையும் சேர்ந்த 30 உறுப்பினர்கள் கொண்ட (சட்டப் பேரவை உறுப்பினர்கள் 20 சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் 10) கூட்டு ஆய்வுக் குழு

ஒன்றை அமைப்பதில் சட்டப் பேரவைக்கு இம் மன்றம் தனது இசைவைத் தெரிவிக்கின்றது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு மேலவையின் கீழ்க் கண்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் :—

1. திரு. எஸ். டி. ஆதித்தன்
2. திரு. எம். ஆறுமுகசாமி
3. திரு. எம். எம். பக்கர்
4. திரு. எல். பலராமன்
5. திரு. ஏ. ஆர். தாமோதரன்
6. திரு. எம். கே. டி. நடராசன்
7. திரு. கே. ராஜாராம்
8. திரு. ரஸ்ஸல் ராஜ்
9. திரு. இரா. சாம்பசிவம்
10. திரு. வி. வெங்கா"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) 1974 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1974).

The Hon. THIRU S. J. SADIQ PASHA: Mr. Chairman, Sir, I move—

"That the Indian Stamp (Tamil Nadu Amendment) Bill @ 1974 (L.A. Bill No. 11 of 1974), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

Article 5 of Schedule I to the Indian Stamp Act, 1899 (Central Act 11 of 1899), as in force in this State, relates to levy of stamp duty on agreement or memorandum of agreement. Under

@ 42-44-ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.